வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி

அலகுப் பரீட்சை- 04

விஞ்ஞானம் | 27th May 2019 | தரம்-07 | 40 நிமிடங்கள்

பகுதி – I

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1. பின்வருவனவற்றுள் சக்தி அல்லாதது?
   1)ஒளி 2)வெப்பம் 3) வளி 4) ஒலி
2. சக்தியின் சர்வதேச அலகு யாது?
   1) ஹேட்ஸ் 2) செல்சியஸ் 3) யூல் 4) மீற்றர்
3. சக்தி முதலைத் தெரிவு செய்க?
   1) காற்றாடி 2) மின்குமிழ் 3) பாயும்நீர் 4) தொலைபேசி
4. புவியின் பிரதான சக்திமுதல் எது?
   1) தாவரங்கள் 2) சூரியன் 3) சந்திரன் 4) மனிதன்
5. நிலக்கரியில் காணப்படும் சக்தி வகை?
   1) அழுத்தசக்தி 2) இரசாயனசக்தி 3) இயக்கசக்தி 4) வெப்பசக்தி
6. மின்சக்தி ⟶ ஒலிச்சக்தி எனும் நிலைமாற்றம் நிகழ்வது?
   1) மின்சூள் 2) மின்மணி 3) மின்அழுத்தி 4) மின்குமிழ்
7. வெப்பம் காரணமாக ஏற்படக்கூடிய மாற்றமல்லாதது?
   1) ஆவியாதல் 2) அமைப்புமாற்றமடைதல் 3) குளிர்ச்சியடைதல் 4)தீப்பற்றல்
8. தைனமோவில் நிகழும் சக்திநிலைமாற்றம் எது?
   1) மின்சக்தி ⟶ இயக்கசக்தி 3) இயக்கசக்தி ⟶ மின்சக்தி
   2) அழுத்தசக்தி ⟶ இயக்கசக்தி 4) இயக்கசக்தி ⟶ இரசாயனசக்தி
9. இலங்கையில் மின்உற்பத்தி செய்யப்பயன்படுத்தும் சக்தி முதல் அல்லாதது?
   1) பாயும்நீர் 2) சூரியன் 3) அணுக்கரு 4) நிலக்கரி
10. அழுத்தசக்திக்கு உதாரணம்?
    1) காற்று 2) கடல்நீர் 3) முறுக்கப்பட்டவிற்சுருள் 4)எரியும்தீக்குச்சி
11. ஞாயிற்றுத்தொகுதியில் சூரியனிலிருந்து புவியின் அமைவிடம்?
    1) 1வது 2) 2வது 3) 3வது 4) 6வது
12. சமுத்திரத்தின் அடித்தளத்தில் புவியோட்டின் தடிப்புயாது?
    1) 1Km 2) 5 Km 3) 25Km 4) 35 Km
13. அகணியில் பெருமளவில் காணப்படும் மூலகங்களில் ஒன்று?
    1) சிலிக்கன் 2) கட்மியம் 3) இரும்பு 4) செப்பு
14. ஞாயிற்றுத் தொகுதியில் அங்கிகளின் நிலவுகைக்கு ஏற்றகோள் எது?
    1) சந்திரன் 2) செவ்வாய் 3) புதன் 4) புவி
15. சூரியனின் மேற்பரப்பின் வெப்பநிலையைக் கொண்ட புவியின் பகுதி?
    1) புவியோடு 2) மென்மூடி 3) வெளியகணி 4)உள்ளகணி
16. புவித்தட்டுக்களாக பிரிக்கப்பட்ட புவியின் பகுதி எது?
    1) புவியோடு 2) மென்மூடி 3) வெளியகணி 4)உள்ளகணி
17. அடிக்கடி புவியதிர்வுக்கு உள்ளாகும் நாடு அல்லாதது?
    1) ஜப்பான் 2) நேபாளம் 3) இலங்கை 4) இந்தோனேசியா
18. புவித்தட்டு எல்லைக்கு அண்மித்த பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுவது?
    1) நீர்வீழ்ச்சிகள் 2) எரிமலைகள் 3) பாலைவனம் 4) பள்ளத்தாக்குகள்

www.lkedu.lk

19. 2015ல் நேபாளத்தில் ஏற்பட்ட புவியதிர்வு எவ் புவித்தட்டு எல்லையில் நடைபெற்றது?

1) இந்தியா-கத்மண்டு 3) இந்தியா-யுரேசியா.

2) வடஅமெரிக்கா-பசுபிக் 4) ஆபிரிக்கா-தென்துருவபுவித்தகடு

20. ஆண்டொன்றுக்கு புவித்தட்டு அசையும் அண்ணளவுப் பெறுமானம்?

1) 10-20 Cm 2) 1-2 Cm 3) 5-35 Cm 4) 1000 Cm

(20x1 = 20 புள்ளிகள்)

பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக

1. அன்றாட வாழ்வில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள சக்தி பயன்படுகின்றது.

1. சக்தி என்றால் என்ன? (3 புள்ளிகள்)
2. சக்தியின் வடிவங்கள் நான்கினைப் பட்டியலிடுக. (4 புள்ளிகள்)
3. அழுத்தசக்தி என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (3 புள்ளிகள்)
4. பொறிமுறை சக்தியினுள் அடங்கும் சக்தி வடிவங்கள் எவை? (4 புள்ளிகள்)
5. இயக்க சக்தியை கொண்ட பொருட்களிற்கு 3 உதாரணங்கள் தருக ? (3 புள்ளிகள்)
6. சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தி வடிவங்கள் எவை ? (3 புள்ளிகள்)

2. சக்தியானது பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன

1. சக்தி நிலைமாற்றம் என்றால் என்ன ? (3 புள்ளிகள்)
2. வானொலி, சூரியக்கலம், ஒளித்தொகுப்பு, மெழுகுவர்த்தி எரிதல் போன்றவற்றில் நிகழும் சக்தி மாற்றத்தினைக் குறிப்பிடுக (8 புள்ளிகள்)
3. அனல் மின் நிலையத்தில் நடைபெறும் சக்தி நிலைமாற்றங்களை குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
4. இரசாயனசக்தி அடங்கியுள்ள பொருட்கள் 4 தருக ? (4 புள்ளிகள்)
5. ஒளிச்சக்தியின் பயன்பாடுகள் 3 தருக ? (3 புள்ளிகள்)

3. புவியானது மலை, ஆறு, கடல், காடுகள் காணப்படுவதால் வனப்புமிக்கதாகும்.

1. புவியின் குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து உட்பகுதியில் காணப்படும் 3 பிரதேசங்களையும் குறித்துக் காட்டுக ? (6 புள்ளிகள்)
2. மென்மூடியில் அடங்கியுள்ள மூலகங்கள் எவை ? (3 புள்ளிகள்)
3. புவியதிர்வு அலையை பதிவு செய்யும் கருவி எது ? இலங்கையில் எங்கு உள்ளது ? (4 புள்ளிகள்)
4. புவியோட்டின் பயன்கள் 2 தருக ? (2 புள்ளிகள்)
5. மென்மூடி, அகணியின் தடிப்புகளைத் தருக ? (2 புள்ளிகள்)
6. புவியின் உட்பகுதிகளை அவித்த முட்டையின் குறுக்குவெட்டுடன் ஒப்பிடுக ? (3 புள்ளிகள்)

4.

1. பின்வரும் விளைவுகள் ஏற்படும் பொழுது புவித்தகடுகள் அசையும் விதத்தினைக் குறிப்பிடுக?
   a) அகழிகள் தோன்றல்
   b) புவியதிர்வு ஏற்படல்
   c) நிலநடுக்கம் ஏற்படல். (6 புள்ளிகள்)
2. இலங்கை அமைந்துள்ள புவித்தகடு எது ? (2 புள்ளிகள்)
3. தரையில் காணப்படும் புவித்தகட்டு எல்லைக்கு உதாரணம் 1 தருக ? (2 புள்ளிகள்)
4. புவித் தகடுகள் அசைவதற்கான காரணம் யாது ? (3 புள்ளிகள்)
5. புவியியலாளர்கள் புவியின் அகக்கட்டமைப்பு தொடர்பாக தகவல்களை பெறும் வழிகள் 2 தருக (4 புள்ளிகள்)
6. "இலங்கையில் பாரிய புவியதிர்வு ஏற்படும் வாய்ப்பு குறைவாகும்" இக்கருத்தைவிளக்குக. (3 புள்ளிகள்)

(20x4 = 80 புள்ளிகள்)

*****

செல்வி. சத்தியஜீவிதா, ஆசிரியர்,
(கிளி/ அக்கராயன் ம.வி)

www.tkedu.lk